2. உரிமைப் பிரச்சினை.

தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவருன தகவல் அளித்ததாக டாக்டர் ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3—4—1974 அன்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேரவையில் எழுப்பிய உரிமை மீறல் அறிக்கைமீது எனது தீர்ப்பைப் பிறகு அறிவிப்ப தாக நான் கூறியிருந்தேன். இப்போது தீர்ப்பை அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் 26—3—1974 அன்று எஸ்.ஐ.இ.டி. கல்லூரி நிர்வாகத்தினர் 80 ரூபாய் கட்டணம் வசூலிப்பதால் மாணவியர்க்கு உண்டாகும் கஷ்ட நிலையைக் குறித்து மாண்புமிகு கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர் கவனத்தை ஈர்த்தார். அதற்கு விடையாக அளித்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'தனியார் கல்லூரிகளின் கணக்குகளை இனிக் கல்வித்துறை தணிச்கை பிரிவு தணிக்கை செய்யும் என அரசு ஆணை இட்டது; அதற்கேற்ப எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் கணக்குகளைக் கல்வித் தணிக்கைப்பிரிவு சரிபார்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினர்; ஆனல் நிர்வாகம் இதற்கு ஒப்புக்கொள்ள வில்லை; மேலும் துறைத் தணிக்கையாளர்களைக் கல்லூரிக்கு அனுப்பவேண்டாம் என்று நிர்வாகம் தெரிவித்தது. இப்பொருளில் அரசு ஆணை வரும்வரை புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தை எஸ்.ஐ.இ.டி. கல்லூரிக்கு வழங்காமல் இருப்ப தாக இயக்குநர் அரசுக்குத் தெரிவித்தார்' என்று கூறினர்.

அதன்மீது விளக்கம் கேட்ட உறுப்பினர் 'இங்கே வாக்குறுதி கொடுத்தாலும், அங்கே நடைமுறையில் வேறு மாதிரி இருக்கிறது; ஆகவே, இதற்குப் பரிகாரம் காணும் வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி ஒரு அறிக்கை வெளி யிட்டால் நலம்' என்று மட்டும்தான் கூறினரே ஒழிய, அமைச்சர் தந்த தகவல் தவறு என்று அன்றும் கூறவில்லை.

30—3—1974 அன்றைய 'இந்து' பத்திரிகையில் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி தாளாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கையை அடிப்படை யாகக் கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் "மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை உண்மைக்கு மாருனது; அது

போன்று தணிக்கைக்கு உட்படுமாறு, நிர்வாகத்தை அரசுத் தரப்பில் கேட்கப்படவில்லை எனக் கல்லூரித் தாளாளர் அவர்கள் இந்துவில் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள், ஆகவே, தவறான தகவலைக் கொடுத்திருப்பதால், மாண்புமிகு கல்வி அமைச்சர் மீது ஓர் உரிமை மீறிய பிரச்சினை எழுப்புகின்றேன்" என்று 30—3—1974 அன்றே ஒரு அறிவிப்பை அளித்தார்கள்.

3—4—1974 அன்று அதை அவையில் எழுப்ப அழைத்தபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்னதாக அறிவிப்பில் கூறிய காரணங்களை மட்டுமே கூறினர்; தனக்கு ஆதாரமாக 'இந்து'வில் வந்த அறிக்கை ஒன்றைத் தவிர்த்து வேறு ஆதாரங்களைத் தரவில்லை.

அது மட்டுமன்று. "இது பற்றிய எல்லாத் தகவல்களையும் இந்த அவை அறிந்தாலல்லாது, கல்லூரித் தாளாளர் கூறியது சரியா; மாண்புமிகு அமைச்சர் கூறியது சரியா என்பதை உறுதி செய்ய இயலாது" என்றும் "கல்லூரித் தாளாளர் அறிக்கை வந்து நான்கு நாட்களாகியும், மாண்புமிகு அமைச்சர் அதற்கு மறுப்பு அறிவிக்காதிருப்பது ஒன்றே அமைச்சர் தந்த தகவல் தவறு என்பதற்கு போதிய சான்றாகும்" என்றும் மட்டுமே அவர் கூறினர்.

அன்று விடையளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'கல்வித் துறைத் தணிக்கைப் பிரிவு தணிக்கை செய்யும் என்ற அரசு ஆணை, கல்லூரி நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டது, அதைக் கல்லூரி நிர்வாகம் ஒப்புக்கொள்ளவில்லை; துறைத் தணிக்கையாளரை அனுப்பவேண்டாம் என மறுப்பும் தெரிவித்தது" என 26—3—1974-ல் தாம் அளித்த அறிக்கையில் கூறிய செய்திகளை உறுதி செய்யப் பல ஆவணங்களை அவைக்கு அளித்தார். தாளாளர் அறிக்கை 'இந்து' வில் வந்த அன்றே டாக்டர் ஹாண்டே அவர்கள் உரிமை மீறிய அறிக்கை கொடுத்து விட்டமையால், தாம் மறுப்பு அறிக்கை கொடுக்கவில்லை என்றும் கூறினர்.

ஆகவே, அமைச்சர் 26—3—1974-ல் அளித்த தகவல் உண்மையானது என்பதும், கல்லூரித் தாளாளர் 30—3—1974-ல் இந்துவில் விடுத்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையும் உண்மைக்கு மாறானது என்பதும் தெளிவாகும்; ஆகவே, உரிமை மீறிய நிகழ்ச்சி ஏதும் எழவில்லை என அறிவிக்கிறேன்.

இந்நிலையில் இதுபோலும், உரிமை மீறிய நிகழ்ச்சிகளை இந்த அவையில் எழுப்பும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோலும் ஆதாரமற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வருவது இப்பேரவையின் மரபுக்கு இழுக்குத் தேடுவதாகும் என்றும் அத்தகைய முறைகளை மேற்கொள்ளவேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திராவிடக் கழகத் தொண்டர்கள் கைதானது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் that the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., that 150 Dravida Kazhagam volunteers were arrested on 3rd April 1974 in different parts of Tamil Nadu.
என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்பதைக் குறித்து விளக்கவேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, நான் கொடுத்து இருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

Unjustified arrest yesterday viz., 3rd April 1974 of peaceful Dravida Kazhagam volunteers throughout the State for demanding constitutional amendment for abolition of caste distinctions.

சார், இதை அன்றைக்கே எழுப்பினேன். எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். இது ரொம்ப முக்கியமான விஷயம். இதிலே இரண்டு மூன்று அம்சங்கள் இருக்கின்றன. அதைச் சொல்வதற்கு எனக்கு உங்களுடைய இன்டல்ஜன்ஸ் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.